**இம்புள்பே பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 26 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுலை 07 திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 13 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின்முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைபிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்துநிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் இம்புள்பே பிரதேச சபையின் நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேட்டிலுள்ள சபைக்கு சொந்தமான 22 காணிகளின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான அனைத்து காணிகளும் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | குறித்த 22 காணிகளின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று 02 களஞ்சிய உருப்படிகளின் பெறுமதி ரூபா 76,189 மிகையாகவும் 03 களஞ்சிய உருப்படிகளின் பெறுமதி ரூபா 17,845 குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | களஞ்சிய பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்ய நடவக்கை எடுத்ததாகவும், எதிர் காலத்தில் அவ்வாறான தவறுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டினுள் சபையின் நிர்மாணம் மற்றும் மேம்படுத்தலிற்காக செலவிடப்பட்ட ரூபா 576,953 மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | நடைமுறை அல்லாத சொத்துக்களின் அதிகரிப்பு மூலதனமாக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் மூலதனமாக நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு கட்டணம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரியதாக மேற்கொள்ள வேண்டிய செலவுகளிற்காக நிதிக்கூற்றில் ஒதுக்கீடு ஏற்படுத்த வேண்டும் | எதிர் காலத்தில் கணக்காய்வு கட்டணத்திற்காக ஒதுக்கீடு வழங்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் முற்பண பதிவேடு மற்றும் முற்பண கட்டுப்பாட்டுக் கணக்கிற்கிடையில் ரூபா 2,766,261 ஆன வித்தியாசமொன்று நிலவியது | கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதி அதற்குரிய உபயோகப் பதிவேடுகளுடன் இணக்கஞ் செய்ய வேண்டும் | முன்னைய பதிவேடுகளின் தகவல்களை கண்டறிந்து சரி செய்யும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை.

| | | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| | (i) | 24 (1) (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | சபைக்கு சொந்தமான பாதைகளை மற்றும் ஒழுங்கைகளின் திட்டங்களை தயாரிக்க மற்றும் அவற்றின் பெயர் பட்டியலை குறிப்பிட 2003 ஆண்டு முதல் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | பாதைகள் வர்த்தமானியில் பிரசுறிக்க முன் பாதைகளுக்கான நிள அளவை பத்திரம் தயாரிக்க வேண்டியதுடன், அதற்காக விலை மனு கோரிய போதும் இது வரை அதற்காக விலை மனு கிடைக்கவில்லை எனவும் அளவையியல் உத்தியோகத்தர்களின் சேவையை பெற்றுக் கொள்ள மீண்டும் விலை மனு கோரி பாதைகளை வர்த்தமானியில் பிரசுறிக்க தேவையான நடவடிக்கைகளை செய்வதாக அறிவிக்கிறேன். |
| | (ii) | 134 பிரிவு | சபையின் முன்னேற்ற கிராமம் என 2015 ஆண்டில் இனங்காணப்பட்ட பிரதேசங்களை முன்னேற்ற கிராம பிரதேசங்களாக பெயரிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | முன்னேற்ற கிராம பிரதேசங்களை பெயரிட தேவையான முக்கிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 149 பிரிவு | சபை அதிகார எல்லையில் அமைந்துள்ள இலங்கை சுற்றுலா சபையில் பதியப்பட்ட ஹோட்டல், உணவகம் அல்லது தங்குமிடங்கள் 04 இலிருந்து 2018/2019 ஆண்டிற்கான வருமானத்திலிருந்து அறவிட வேண்டிய 01 சதவீதம் வரையான வரி அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை திரட்ட தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக ஹோட்டல்கள் மூடப்பட்டிருந்ததனால் அறவிடலில் தாமதமொன்று ஏற்பட்டதாகவும் தற்போது குறித்த நிறுவனங்கள் அறிவூட்டப்பட்டுள்ளதாக வும் அறிவிக்கிறேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 104 | சபையின் கெப் வண்டி ஒன்று விபத்திற்குள்ளாகியதில் ஏற்பட்ட நட்ட இழப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | விசாரணை குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ள போதும் இது வரை விசாரணை மேற்கொள்ளவில்லை என அறிவிக்கிறேன். |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(5) | 2002 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை வறியோகிக்கப்பட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 5,314,427 ஆன 112 முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2002 ஆண்டு முதல் 2009 வரை தீர்க்கப்படாத முற்பணத்தை பதிவழிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 2012 சனவரி 05 ஆம் திகதிய 01/2012 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சமுதாய அடிப்படை சங்கங்களின் தகைமையை பரீட்சிக்காது ரூபா 9,863,066 பெறுமதியான 12 ஒப்பந்தங்கள் சமுதாய அடிப்படை சங்கங்களிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும | தொடர்புடைய சமுதாய அடிப்படை சங்கங்கள் பதியப்பட்டுள்ள பிரதேச செயலகம் கமநல சேவை போன்ற நிறுவனங்களினால் வழங்கப்படும் தகைமை சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு வேலைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதாகவு ம், பிரதேச செயலாளரின் பிரதிநிதிகள் உள்ளிட்ட குழுவை நியமித்து சமுதாய அடிப்படை சங்கங்களை தெரிவு செய்வது கடினமானது என அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 2,687,248 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 10,086,825 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 7,238,538 | 9,404,694 | 7,534,479 | 6,388,034 | 5,719,099 | 7,839,351 | 6,330,106 | 5,341,086 |
| (ii) | வாடகை | 2,229,000 | 1,295,322 | 1,295,321 | 33,660 | 352,000 | 1,601,615 | 1,613,615 | 33,660 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,247,000 | 1,077,544 | 1,077,544 | - | 1,161,000 | 1,762,591 | 1,762,591 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 24,397,500 | 14,072,030 | 23,290,544 | 27,825,887 | 17,468,000 | 13,208,728 | 11,027,164 | 37,154,976 |
| | | 35,112,038 | 25,849,590 | 33,197,888 | 34,247,581 | 24,700,099 | 24,412,285 | 20,733,476 | 42,529,722 |

#### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வீத வரி | | |
| முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் வீத வரி மற்றும் வரிகளின் நிலுவை வருமானம் ரூபா 1,046,948 இனால் அதிகரித்திருந்தது. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை திரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் | தீயினால் அழிவுற்ற தேயிலை தொழிற்சாலையிற்குரிய வீதவரியை பதிவழிக்க கோருதல் தற்போது மேற்கொள்ளப்படுவதாகவும், எதிர்காலத்தில் நடமாடும் சேவை நடாத்தி எஞ்சிய நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) ஏக்கர் வரி

| | | |
|---|---|---|
| முன்னைய ஆண்டு நிலுவையாக இருந்த ரூபா 101,270 ஏக்கர் வரியிலிருந்து ரூபா 96,861 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏக்கர் வரி ஒப்பாய்வொன்றை மேற்கொண்டு நிலுவை வருமானத்தை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏக்கர் வரி செலுத்தும் பெறுமளவினரின் காணிகள் துண்டாக்கப்பட்டுள்ளதால் வரி செலுத்துவதை புறக்கணித்துள்ளதுடன் நிலுவையை தீர்க்க தேவையான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படுகிறது. |

(இ) குப்பை வரி

| | | |
|---|---|---|
| 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159 (2) பிரிவு பிரகாரம் சபை அதிகார எல்லையில் அமைந்துள்ள 71 வியாபார தளங்கள் மற்றும் வீடுகளிலிருந்து 2010 ஆண்டு முதல் அறவிட வேண்டிய ரூபா 315,000 ஆன குப்பை வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை திரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2020 ஜுன் மாதம் மேற்கொண்ட நடமாடும் சேவை வேலைத் திட்டத்தின் மூலம் நிலுவை குப்பை கட்டணம் அறவிடப்பட்டதாக அறிவிக்கிறேன். |

**2.2.3 ஏனைய வருமானங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 குடிநீர் கருத்திட்டங்களிலிருந்து நிலுவையாக இருந்த நீர் கட்டணம் ரூபா 3,517,866 இனை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை திரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2020 ஆண்டு 02 நடமாடும் சேவைகளை நடாத்தி நிலுவை நீர் கட்டணம் ரூபா 115,000 பணத்தை அறவிடப்பட்டுளளதுடன் எஞ்சிய நிலுவையை அறவிட எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | சபை அதிகார எல்லையிற்கு உட்பட்ட 26 பிரிவுகளில் விளம்பரப் பலகைகளை இனங்காண நடவடிக்கை எடுத்திருக்காததுடன் ஏனைய 24 பிரிவுகளில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 417 விளம்பரப் பலகைகளிற்காக கட்டணம் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை இனங்கண்டு திரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் | உப விதிகள் தயாரிக்கப்பட்டு தேவையான அங்கீகாரத்திற்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், அதன் பிரகாரம் விளம்பரப் பலகைகளிற்காக கட்டணம் அறவிட எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபரகருவ மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 11,553,490 ஆன தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை திரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் | நீதிமன்ற தண்டப்பணத்தை எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் பிரதேச சபையினால் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கல், நீர் விநியோகம் மற்றும் நீர் கருத்திட்ட முகாமை, விளம்பர அறிவித்தல்களை ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் விளம்பரப்பலகை கட்டணம் அறவிட மற்றும் உணவக கட்டண ஒழுங்கமைப்பிற்குரிய உப விதிகள் விதிக்க வேண்டிய போதும், 2020 மே வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உப விதிகளை விதித்து வருமானம் திரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | விளம்பர அறிவித்தல் உப விதிகள் தயாரிக்கப்பட்டு 2020 மே 11 திகதி சபையில் முன்வைத்து அங்கீகரிக்கப்பட்டு முன் ஏற்பாடுகளிற்காக சமர்பிக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய விடயங்களிற்காக எதிர் காலத்தில் உப விதிகளை விதிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அதிகார எல்லையில் அமைந்துள்ள உணவக வாடகை செலுத்தாதது தொடர்பாக சபையினால் எடுக்கப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகளிற்கு அமைய ரூபா 72,048 ஆன மொத்த நிலுவையையும் 2019 ஜுலை மாதம் அறவிட்டு முடிய வேண்டிய போதும், மேலும் ரூபா 49,048 அறவிட வேண்டியதாக நிலவியது. | கொடுப்பனவு புறக்கணிப்பது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**ஊழியர் வெற்றிடமும் மிகையும்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயலாளர் பதவி வெற்றிடமானதால் செயலாளர் பதவியில் பதிற்கடமை புரிய 2014 ஆண்டில் அரச முகாமை தரம் 1 அலுவலர் ஒருவர் உள்ளூராட்சி ஆணையாளரினால் நியமிக்கப்பட்டிருந்தார். | முக்கிய பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒவ்வொறு ஆண்டு ஒவ்வொறு காலாண்டிலும் ஆளணி தகவல்களுடன் அனைத்து வெற்றிடங்கள் தொடர்பாகவும் உள்ளூராட்சி உதவி ஆணையாளரூடாக பிரதான செயலாளர் அறிவூட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | வெற்றிடமாக இருந்த தொழிநுட்ப சேவை அலுவலர் பதவியொன்று, நூலக அதிபர் பதவியொன்று மற்றும் ஆயுர்வேத மருந்தக பதவியொன்றையும் நிரப்ப நடவடிக்கை எடுக்காததால் குறித்த கடமைகள் மற்றும் செயற்பாடுகளை வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்கதாகவும் நிரைவேற்ற தடையாக இருந்தது. | முக்கிய பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த பதவி வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாரிற்கு அறிவித்து அனுப்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 02 அபிவிருத்தி உத்தயோகத்தர் பதவிகள் 2017 ஆண்டு முதல் மிகையாக காணப்பட்டது. | மிகையை முறையாக்கிக் கொள்ள வேண்டும். | இரண்டு அபிவிருத்தி உத்தயோகத்தர் பதவி மிகை தொடர்பாக ஆளணி தகவல்களுடன் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு அறிவித்து அனுப்பியுள்ளதாக அறிவிக்கிறேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 128,355,776 ஆன 4 கணக்கு விடயங்களிற்குரிய நிலையான சொத்து பதிவேடு மற்றும் விரிவான அடடவணைகள் நாளாதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. | நிலையான சொத்து பதிவேடு மற்றும் விரிவான அடடவணைகள் நாளாதுவரையாக பேணப்பட வேண்டும். | நிலையான சொத்து பதிவேடு மற்றும் விரிவான அட்வணைகளை பேண ஏதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கின்றேன். |

### 3.4.2 விளைவற்ற/குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,550,000 பெறுமதியான சபைக்கு சொந்தமான கழிவகற்றும் பவுசர் 2010 ஆண்டு முதல் விளைவற்று நிலவியது. | கழிவகற்றும் பவுசரை பயனுள்ள விதத்தில் ஈடுபடுத்த அல்லது தேவையுள்ள ஏனைய உள்ளூராட்சி நிறுவனததிற்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கழிவுகளை அகற்ற இடமொன்று இல்லாததால் கழிவகற்றும் பவுசரை பயன்படுத்த முடியாது என அறிவிக்கிறேன். |
| (ஆ) | ரூபா 42,000,000 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கலகம பலநோக்கு கட்டிடம் மீளாய்வாண்டு இறுதி வரையும் விளைவற்று நிலவியது. | குறித்த கட்டிடத்தை பயனுள்ள விதத்தில் பயன்படுத்த வேண்டும். | குறித்த கட்டிடத்தை வருமானம் ஈட்டும் வேலைத்திட்டமொன்றில் ஈடுபடுத்த திட்டமிட்டு தேவையான ஒதுக்கீட்டை மாகாண சபையிலிருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருந்த போதும், அவ்வொதுக்கீடு கிடைக்காமை மற்றும் சபையின் சீரற்ற நிதி நிலைமை காரணமாக அந் நடவடிக்கையை மேற்கொள்ள முடியவில்லை என அறிவிக்கிறேன். |

**3.5 பெறுகைகள்**

**ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட கெபொக்வத்த கழிவுப் பொருள் முகாமை வளவிலுள்ள கொன்கிரீட் பாதை மேற்பரப்பில் 7.7 மீட்டர் நீலம் மற்றும் 1.5 மீட்டர் அகலமான பகுதி உடைந்து பாதைக்கு வெளியே தள்ளப்பட்டு இருந்த போதும், ரூபா 83,652 ஆன நிறுத்தற் பணத்தை பயன்படுத்தி அதனை பழுதுபார்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிறுத்தற் பணத்தை பயன்படுத்தி உடைந்துள்ள பகுதியை பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடைந்துள்ள பகுதியை ஒப்பந்த தரப்பினரை ஈடுபடுத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்த போதும், இதுவரை அது நடைபெறாததால் நிறுத்தற் பணத்தை பயன்படுத்தி பாதை மேற்பரப்பில் உடைந்துள்ள பகுதியை எதிர்காலத்தில் பழுதுபார்க்க எதிர்பார்ப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | பின்னவல குடிநீர் கருத்திட்டத்தை மேம்படுத்தும் வேலையை 24 நாட்களில் பூர்த்தி செய்யும் அடிப்படையில் 2017 நவம்பர் 20 திகதி ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,440,500 பெறுமதியான நீர் உபகரணங்கள் சபை வளவில் திரட்டப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,152,684 செலுத்தப்பட்டிருந்த போதும் நீர் குழாய்களை புதைக்கும் வேலைகள் 2020 மார்ச் வரை மேற்கொள்ளப்பட்டிருக்காததால் பழைய நீர் குழாய்கள் வெடித்து பாதைகளிற்கு பாதிப்பு ஏற்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையை மீறியது தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்திட்டத்தை திட்டமிட்டவாறு பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், உடன்படிக்கை மீறியது தொடர்பில் ஒப்பந்தக்காரருக்கு எதிராக உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் வேலைகளின் செயற்பாடுகள் ஒப்பந்தக்கார தரப்பினரால் உரிய முறையில் மேற்கொள்ளாததால் வேலை பெறுமதியில் 15 சதவீத பணம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், நேர் தொழிலாளர் ஊதியத்தை பயன்படுத்தி அக் கருத்திட்டத்தின் வேலைகளை பூர்த்தி செய்ய சபை தீர்மானிதுள்ளதால் துரிதமாக குழாய் புதைக்கும் வேலைகளை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### தீர்க்கப்படாத அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பம்பஹின்ன வாராந்த சந்தை அபிவிருத்திக்காக 2015 மற்றும் 2017 ஆண்டுகளில் ரூபா 4,561,397 செலவிடப்பட்டிருந்த போதும், எஞ்சிய ஒதுக்கீடு கிடைக்காததன் மீது சந்தை நடாத்த பொருத்தமான விதத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாராந்த சந்தையை அபிவிருத்தி செய்து பயன்படுத்த துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 ஆண்டில் பிரதேச சபை வலுவூட்டும் நிகழ்சித் திட்டத்தின் கீழ் இக் காணித்துண்டில் வாராந்த சந்தை நிர்மாணிக்க தீர்மானிக்கப்பட்டு ரூபா 4,561,397 செலவில் வாராந்த சந்தை நிர்மாணிக்கும் ஆரம்ப கட்டம் பூர்த்தி செய்யப்பட்ட போதும் வாராந்த சந்தை நடாத்திச் செல்ல தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்ய தேவையான ஒதுக்கீடு கிடைக்காததால் முன் அபிவிருத்தி நடவடிக்கைகள் நின்றுள்ளதாக அறிவிக்கிறேன். |